# வெலிமடை இடைத்தேர்தலில் மூவர் போட்டி

Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 218
தபால்பெட்டி எண். 49
போன்:389
National Tamil Daily தேசிய தினசரி

[illegible] கார்த்திகை 1 ஷவ்வால் 24 சனிக்கிழமை [16-11-68]

பதுளை, வெள்ளி

வெலிமடைத் தொகுதி பாராளுமன்ற இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இன்று பதுளைக் கச்சேரியில் தாக்கல் செய்யப்பட்டன.

திரு. பேர்ஸி சமரவீர சுயேச்சையாளராகவும், திரு பீ.வி. இரத்நாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பிலும் திரு. ஆர். எம். பண்டார சுயேச்சையாளராகவும் போட்டியிடுகின்றனர். திரு. பேர்ஸிசமரவீர சுயேச்சையாளராக போட்டியிட்டாலும், யு.என்.பி.யின் ஆதரவுடனேயே இவர் போட்டியிடுகிறார்.

டிசம்பர் 17-ம் திகதி வெலிமடைத் இடைத்தேர்தல் நடைபெறுமெனஇன்று அறிவிக்கப்பட்டது.

தேர்தல் ஆட்சேப மனு வழக்கில் இத்தொகுதி எம். பி. யாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்த திரு. பேர்ஸி சமரவீரா பதவி இழந்ததைத் தொடர்ந்து இடைத்தேர்தல் நடைபெறுகிறது. வெலிமடைத் தொகுதியின் வாக்காளர் தொகை 22,773.

## முன்னாள் வங்கி கவர்னர் காலமானர்

மகவெலம்பிட்டி, வெள்ளி

மத்தியவங்கியின் முன்னாள் கவர்னரான திரு. டி. டபிள்யு. ராஜபத்திரான தமது 67-வது வயதில் காலமானார்.

### நீர்கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு

# சடலத்துடன் வந்த உறவினர் விபத்தில் சிக்கினர்

## கணவனை இழந்த பெண் தாலிக் கொடியை இழந்தார்

### விபத்து நடந்த இடத்தில் திருடர் கோஷ்டி கைவரிசை

நல்லூர், வெள்ளி

நீர்கொழும்பில் காலமான யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவரின் சடலத்தை அளவெட்டிக்குக் கொண்டுவந்த அவருடைய உறவினர்கள் அனுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த ராஜாங்கணையில் விபத்தில் சிக்கி இருவர் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து நடந்த சமயத்தில் அவர்கள் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தபோது அங்கு அச்சமயம் வந்த சிலர் விபத்தில் சிக்கியவர்களிடமிருந்து நகைகளையும் மற்றும் பொருள்களையும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது. காலஞ்சென்றவரின் மனைவியின் கழுத்திலிருந்த தாலிக் கொடியும் களவு போய்விட்டதாக அறியப்படுகிறது.

நீர்கொழும்பில் மராமத்து எஞ்ஜினியராகக் கடமையாற்றிய அ. வேல்சாமி குடல்நோய் சிகிச்சைக்காக சமீபத்தில் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டார். சத்திரசிகிச்சையின் பின்னர் நேற்று அவர் காலமானார். காலஞ்சென்ற திரு. வேல்சாமியின் சடலத்தை அவரது உறவினர்களும் நண்பர்களும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்தனர். பிரேத காரில் சடலமும் மற்றுமிருவரும் பிரயாணம் செய்ய அதற்குப் பின்னால் மோட்டார் வான் ஒன்றில் காலஞ்சென்றவரின் மனைவி மாமன் அமிர்தலிங்கம், மைத்துனர் வாமதேவன், தந்தை அப்பாத்துரை, தம்பி பத்மநாதன் ஆகியோரும் மற்றும் சிலரும் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். ராஜாங்கணையில் இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ் ஒன்றும் அந்த மோட்டார் வானும் மோதி விபத்துக்குள்ளாகின. வானில் பிரயாணம் செய்தவர்களில் அமிர்தலிங்கமும் வாமதேவனும் கைகால் காயங்களுடன் அறிவிழந்த நிலையில் கிடந்தனர். அப்பாத்துரையும் பத்மநாதனும் சிறு காயங்களுடன் தப்பினர். காயமடைந்த நால்வரும் உடனடியாக அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டனர். அமிர்தலிங்கத்தின் நிலை மோசமாக இருப்பதாகவும் அவரை

(8-ம் பக்கம்பார்க்க)

### ஆயுதம் தாங்கிய கோஷ்டி

## ஓடும் ரயிலில் கொள்ளை

வவுனியா, வெள்ளி

ஓடும் ரயிலில் பிரயாணஞ் செய்து கொண்டிருந்த கணவன், மனைவி இருவரைத் துப்பாக்கி முனையில் மிரட்டி தாலிக்கொடியையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்தனராம் நால்வர். இச்சம்பவம் நேற்றிரவு மன்னாரிலிருந்து கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்த ரயிலில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரயில்பெட்டி ஒன்றில் கணவனும் மனைவியும் பிரயாணம் செய்துகொண்டிருந்ததாகவும், செட்டிகுளத்திற்கு அண்மையில் நால்வர் அதே பெட்டியிலும் ஏறி, இவர்களை கத்தி, கிறீஸ் போன்றவற்றினால் கொலை செய்யப்போவதாக பயமுறுத்தி, மனைவியின் கழுத்திலிருந்த தாலிக்கொடியை அறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

[8-ம் பக்கம் பார்க்க]

## நாளை அமைச்சர் தஹா யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், சனி

நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக பூர்வமான விஜயமொன்றை மேற்கொள்ளும் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ தஹாநாயக்கா இங்கு இரு மணித்தியாலங்கள் மட்டுமே தங்கியிருப்பார்.

வடபகுதியில் பனங்கள்ளிலிருந்து சாராயம் தயாரிப்பது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவே டாக்டர் தஹாநாயக்கா இங்கு வருவதாகத் தெரிகிறது. 17-ம் திகதி காலை 9 மணிக்கு விசேஷ விமானத்தில் பலாலியை வந்தடைவார். இவருடன் மதுபரிபாலன இலாகா மது தயாரிப்பு இலாகா ஆகியவற்றைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகள் பலரும் இங்கு வருகிறார்கள்.

அன்றுகாலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் இது சம்பந்தமாக நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்துக்கு வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்களும் காரியாதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சரும் அவரது குழுவினரும் பகல் 11 மணிக்கே விமானத்தில் கொழும்பு திரும்புவார்கள்.

[வா. தி]

### மகாத்மாவின்பேரர் இன்று வருகிறார்



ஸ்ரீ ராஜ்மோகன் காந்தி முதல்முதலாக இன்று காலை தமது தார்மீக புனருத்தாரணசகாக்களுடன் யாழ்ப்பாணம் வருகிறார். மூன்று நாட்கள் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் மாநாடும் நாடகம் முதலியனவும் நடைபெறும்.

### பிரதமர் 27ல் பாரத பயணம்:

# வேலைநிறுத்தத்தை சமாளிக்க ஜே. ஆரிடம் பொறுப்பு

கொழும்பு, வெள்ளி

தாம் பாரதத்தில் தங்கியிருக்கும்பொழுது இலங்கையில் ஏற்படும் எவ்வித நிலைமையையும் சமாளிப்பதற்கான சகல பொறுப்புகளையும் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவிடம் ஒப்படைப்பதாக இன்று நடைபெற்ற அமைச்சர்கள் கூட்டத்தில் பிரதமர் தெரிவித்தார். தேவையெனில் [illegible] பிரதமர் ராஜாங்க அமைச்சரைக் கேட்டுக்கொண்டார். இவ்வித நிலைமை ஏற்படாதென்றே தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

வருகிற 28-ந் திகதி நடைபெறவிருக்கும் உத்தேச பொதுவேலைநிறுத்தம் சம்பந்தமாகக் குறிப்பிட்டுப் பேசுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் இம்மாதம் 27-ம் திகதி பாரதம் செல்ல விருப்பதை முன்னிட்டே இவ்வித ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரதமருடன் பாரதம் செல்லவிருந்த பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. வி. பி. சமரசிங்க பிரதமருடன் செல்லமாட்டாரெனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பொதுவேலைநிறுத்தம் ஏற்படின் நிலைமையைச் சமாளிக்கக்கூடிய சகல ஏற்பாடுகள் சம்பந்தமாகவும் மந்திரிசபைக் கூட்டத்தில் ஆலோசனை நடத்தி முடிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் வியட்னும் கலந்து கொள்ளாமல் முடிவேதும் செய்ய முடியாது

## அமெரிக்கா அறிவிப்பு

### 'பாரிஸ் பேச்சுவார்த்தை' பின் செல்கிறது

வாஷிங்டன், நவ. 15

**தென்வியட்னும் கலந்து கொள்ளாது வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தையேதும் நடைபெற முடியாது என அமெரிக்கா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. தென் வியட்னும் கலந்து கொள்ளாது எவ்வித முடிவுக்கும் வரமுடியாது எனவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.**

பாரிஸில் நிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடர்ந்து நடைபெறுவதற்கு சம்பந்தப்பட்ட நாடுகளின் நிபந்தனைகள் முட்டுக்கட்டையாக இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

தென்வியட்னும் அதிபர் திரு. வான்தியூ வாட்ஸ் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தென்வியட்னுமும் வடவியட்னுமுமே பங்கு கொள்ள வேண்டுமெனவும் அமெரிக்கா தேசிய விடுதலை முன்னணியினர் அந்தஸ்துடைய நிலைமையை வகுக்க வேண்டுமென தாம் தெரிவித்த திட்டத்தில் பிடிவாதமாக இருப்பதும் அமெரிக்கா வியட்னும் விஷயத்தில் சம்பந்தப்பட்டிருப்பதால் அமெரிக்கா முக்கிய இடம் வகிக்க வேண்டுமென அமெரிக்கா தரப்பினர் விரும்புவதாலும் ஏற்பட்டுள்ள நிலைமை சமரசமாகத் தீர்ப்பதில் இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வித சிக்கல்கள் தோன்றியுள்ளதால் பாரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தை எப்போது மீண்டும் ஆரம்பிக்கும் என்பதை இப்போது திட்டமாகக் கூற முடியாத நிலை தோன்றியுள்ளதாக அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### பீரங்கிப் பிரயோகம்

இதற்கிடையே படையிலகப் பிரதேசத்தில் வடவியட்னும் பீரங்கித் தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தென் வியட்னும் சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவும் இது பற்றி எச்சரிக்கை செய்துள்ளது.

## ஒத்துழைப்பு ஒப்பந்தம்

பேர்லின், நவ. 15

ருமேனியாவுக்கும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்குமிடையே பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்காக ஓர் ஒப்பந்தம் இங்கு கைச்சாத்திடப்பட்டது.

உதவிப் பிரதமர் திரு. பிச்ஹர் புக்கரெஸ்டுக்குச் சென்று பொருளாதார ஒத்துழைப்பு பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தினர். ருமேனிய ஜனாதிபதி நிக்கலஸ் செவஸ்கு அவரை வரவேற்ருர்.

### அபேட்சகர்கள் தீவிரம்

[illegible] செப்பாய், வெள்ளி கோப்பாய் கிராமசபைத் தேர்தல் காலம் நெருங்குவதையொட்டி போட்டியிடும் அபேட்சகர்கள் வீடு வீடாகச் சென்று வாக்கு வேட்டையாடுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

---

## கூரைகள் பறந்தன

ஒரிசா, நவ.15

ஒரிசாவில் நேற்று வீசிய புயலில் வீடுகளின் கூரைகள் பறந்தன. சில கட்டிடங்கள் சேதமுற்றன.

## "பதிவுகாரர்களுக்கு சிங்கள நிபந்தனை வேண்டாம்"

### வடபகுதி பதிவுகாரர் கோரிக்கை

அழிபுரம், வெள்ளி

அண்மைக்காலத்தில் தமிழ் பகுதியில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட பதிவுகாரர்கள் சிங்களம் கட்டாயமாக படிக்கவேண்டும் என்ற நிபந்தனை ஓர் தேவையற்ற விதியாகும். பதிவுகாரர் அரசாங்க உத்தியோகத்தர்கள் போல் சேவையிலுள்ளவர்கள் அல்லர். அவர்கள் இடமாற்றத்துக்கோ, அல்லது மாதாந்த அடிப்படையிலோ உள்ளவர்களும் அல்லர் அவர்களுக்கு சிங்கள நிபந்தனை ஏன்? இந்த நிபந்தனை தேவையில்லை என்பதை சுட்டிக்காட்டி தமிழ் ஆட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்துக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்துவதுடன், இந்த நிபந்தனையை நீக்கவேண்டும், எனக்கோரும் ஒரு தீர்மானம் வடபகுதி பதிவுகாரர்கள்சங்க மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. கடந்தவாரம் குருணுகலையில் நீதிஅமைச்சர் யூ. பி. வன்னிநாயக்கா தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை பதிவுகாரர் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட பின்வரும் நான்கு தீர்மானங்களையும் உடன் அமுலுக்கு கொண்டு வருமாறும் கோரியுள்ளனர்.

எல்லாப் பதிவுகாரர்களையும் சமாதான நீதிபதிகளாக நியமனம் செய்யவேண்டும்.

இலங்கை பூராவும் உள்ள ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்ய சகல பதிவுகாரர்களுடைய குடும்பங்களுக்கும் வருடம் ஒருமுறை இலவச பிரயாண டிக்கட் வழங்கவேண்டும்.

கந்தோர் வாடகையாக ரூபா இருபத்தைந்துக்கு குறையாது மாதம் வழங்க வேண்டும்.

சேவையில் இருந்து விலகும் போது சேவை செய்த காலத்துக்கு வருடம் ரூபா இருநூற்றி ஐம்பது வீதம் சன்மானம் வழங்க வேண்டும்.

இக்கோரிக்கைகள் நீதி அமைச்சராலும் அனேக ஆட்சிமன்றப் பிரதிநிதிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், காலதாமதம் செய்யாது செயற்படுத்த வேண்டும் எனவும் மேற்படி சங்கத்தினர் வேண்டியுள்ளனர். அமைச்சர் கொடுத்த வாக்குறுதியை உடன் அமுல் நடாத்த ஒவ்வொரு பிரிவிலும் உள்ள சங்கங்கள் பாடுபடவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## செக். கம்யூனிஸ்ட் வேண்டுகோள்

பிராக், நவ. 15

செக்கோஸ்லவேக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு நேற்று கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. டுப்செக் தலைமையில் நடைபெற்றபோது நாட்டுக்குப் பாதகத்தை விளைவிக்கக் கூடிய விதத்தில் எவரும் நடந்துகொள்ள வேண்டாமென மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

---

## கொழும்பு-புதுடில்லி நேரடி தொடர்பு

பம்பலப்பிட்டி, வெள்ளி

இம்மாதம் 27ம் திகதியிலிருந்து கொழும்புக்கும் புதுடில்லிக்குமிடையே நேரடி டெலிபோன் தந்தி தொடர்புசேவை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

பாரதத்துக்கு விஜயம் செய்யும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அங்கு தங்கியிருக்கையில் அவர் தேவையானபோது உடனுக்குடன் இலங்கையுடன் தொடர்பு கொண்டிருக்க ஏற்ற சகல வசதிகளும் இந்திய தொலைபேசித் தொடர்பு சேவைப் பகுதியினருடன் சேர்ந்து செய்துகொள்ளப்பட்டுள்ளது.

திரு. டட்லி இம்மாதம் 27ம் திகதி புதுடில்லிசெல்கிருர்.

---

## வள்ளி திருமணம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

தொண்டமானுறுசெல்வச் சந்நிதி கோவிலில் வருகிற ஞாயிற்றுக்கிழமை அபிஷேகம் நடைபெறும். இரவு வள்ளியம்மன் திருமணப்படலப் படிப்பும், கந்தபுராணப் படிப்பும் முடியும். அதைத் தொடர்ந்து வள்ளி திருமணமும் விசேஷ உற்சவமும் நடைபெறும்.

---

## பதவி துறப்பவர்

பம்பலப்பிட்டி, வெள்ளி

பிரிட்டனில் இலங்கை ஹைகமிஷனராகவிருக்கும் சேர் லலித் ராஜபக்ஷ தமது பதவியை விரைவில் துறக்கவிருக்கிருர்.

அடுத்தவருடம் ஜனவரி முதல் வாரத்தில் அவர் இலங்கை வரவிருக்கிருர்.

## அமெரிக்கா விடமிருக்கும் அணு ஆயுதங்கள் எண்ணிக்கைபற்றி பாதுகாப்பு அமைச்சர் தகவல்

பிரெசல்ஸ், நவ. 15

அமெரிக்காவிடம் தற்போது ஐயாயிரத்துக்கும் அதிகமான அணு ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. கிளிபோர்ட் இங்கு நாளை தெரிவித்தார்.

வடஅத்லாண்டிக்ராணுவ ஒப்பந்த நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாடொன்றிலேயே திரு. கிளிபோர்ட் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் படைபலம்பற்றி அறிவித்த பாதுகாப்பு அமைச்சர் ரஷ்யாவிடம் ஆயிரத்துக்கும் சிறிது அதிகமான அணு ஆயுதங்களே இருப்பதாக எடுத்துக் கூறினுர்.

ஜனவரியில் பொறுப்பேற்கும் நிக்சன் அரசாங்கம் வெளியுறவுக் கொள்கையில் ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை அதிக மாற்றமின்றியே நடத்தக் கொள்ளுமென தாம் நம்புவதாகவும் திரு கிளிபோர்ட் கருத்துத் தெரிவித்தார்.

இதன்படி ஐரோப்பிய நாடுகளுக்குத் தொடர்ந்து அமெரிக்க பாதுகாப்புக் கிடைத்துவரும் என்பதை அவர் வலியுறுத்தினுர்.

## இலங்கைக் காரியதரிசி விஜயம்

பேர்லின், நவ. 15

இலங்கை கலாச்சார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஆஸ்டின் ஜயவர்த்தன அண்மையில் ஜெர்மனி ஜனநாயகக்குடியரசுக்கு விஜயம் செய்தார். அவர் லயிப்சிக் நகரில் சங்கீத கல்லூரி, நடனக் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி ஆகியவற்றைச் சென்று பார்த்தார்.

கலை நகரம் டிரெஸ்டன் கோத்தோ போன்ற மகாகவிஞர்கள் வசித்த வெய்மர், ஹிட்லரின் சிறைமுகாம் மிருந்த புச்சன்வால்ட் ஆகிய இடங்களுக்கும் திரு. ஜயவர்த்தன விஜயம் செய்தார்.

---

## 50 கோடி ரூபாவுக்கு முந்திரிகை பருப்பு

புதுடில்லி, நவ.15


இவ்வருடம்முதல் 10 மாதங்களில் இந்தியாவிலிருந்து 50 கோடி ரூபா வரையான முந்திரிப்பருப்புகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகியது.

---

## சந்திரனை சுற்றியது

மாஸ்கோ, நவ. 15

ரஷ்யாவிலுள் சென்ற ஞாயிற்றுக்கிழமை விண்வெளிக்கு அனுப்பப்பட்ட சோண்ட்-6 என்ற ஆளில்லாத விண்வெளிக்கலம் சந்திரனைச் சுற்றிவந்ததாகவும் சந்திரனைப் பற்றிய புதிய தகவல்களை இது சேகரித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுருக்கம்

**'ஜனநாயகம் என்றால் என்ன'**

"நாட்டின் பெரும்பான்மையினரின் உரிமை வழங்கியும், சிறுபான்மையினரின் குரலுக்கு மதிப்பளித்து, அவர்களின் உரிமைகளையும் வழங்க வேண்டுமென்ற அடிப்படைத் தத்துவத்தில் எழுந்ததே ஜனநாயகம்" என்று வேருவலை எம். பி. வைஜசகம ஐ. தே. கட்சி இளைஞர் இயக்கத்தின் விசேட கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

**இளம்பெண் காப்பாற்றப்பட்டாள்**

ஹுணுவை புகையிரத நிலையத்துக்கண்மையில் புகையிரத முன்பாய்ந்து தற்கொலைசெய்ய முயற்சித்த இளம்பெண் ஒருவர், புகையிரத சாரதியின் சாமர்த்தியத்தினால் காப்பாற்றப்பட்டார். இவரிடமிருந்து காதற் கடிதங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

0 0 0

**அமைச்சரின் தீர்மானம்**

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் விளையாட்டுக்கென தனிப்பிரிவு அமைக்க தேசிய சேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாச தீர்மானித்துள்ளார்.

0 0 0

**அமைச்சர் திறந்தார்**

அனுராதபுரம் "சலுசல" கிளையை போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருல்ல நேற்று புதிய நகரில் திறந்து வைத்தார்.

0 0 0

**எதிர்க்கவேண்டும்**

பாலுணர்வைத் தூண்டும் பத்திரிகைகளாலும், சினிமா சஞ்சிகைகளாலும் இளைஞர் சமுதாயம் சீரழிந்துகொண்டு வருகிறது. இதை எதிர்த்துப்போராட சைவசமய இளைஞர்களும், ஏனைய மதத்து இளைஞர்களும் ஒன்றுபட்டு செயல்பட முன்வர வேண்டும்" மட்டக்களப்பு

**இன்றைய பலன்**

சனிக்கிழமை
16-11-68
கார்த்திகை 1 உ

திதி- ஏகாதசி. இரவு 9-09 மேல் துவாதசி.

நட்சத்திரம்- உத்தரம் பகல் 4-21 மேல் அத்தம்

ராகுகாலம் - 9-08—10-38.

சுபநேரம் - 3-08—4-38.

இன்று பிறந்தவர்களுக்கு- புதிய சிந்தனைகள் உருவாகும். எழுத்தாளர்களாயின் புகழ் பெருகும். மாணவர்களுக்குக் கல்வியில் அதிக ஆர்வம் ஏற்படும். குடும்பஸ்தர்கள் வாழ்க்கையில் கவலைகளை சம்பவங்கள் இடம்பெறும். வாகனம்செலுத்துவோர் மிகவும் நிதானமாக இருக்கவும். [illegible] காலம். கடற்றொழிலாளர்கள் அதிகம் பயனடைவர். வணிகர்களுக்கு வருவாய் பெருகலாம். புதிய தொழில்முயற்சிகளும் மேற்கொள்ளப்படலாம். நோய்க்கு இடங்கொடாது உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

மேஷம்- மனப்போராட்டம், தடுமாற்ற நிலை.
ரிஷபம்- குரு விசுவாசம், குறிக்கோள் வெற்றி
மிதுனம்- செய்தொழில் சிறப்பு, தெய்வத்துணை.
கடகம்- வரவில் உயர்வு வாழ்த்துமுண்டு.
சிம்மம்- சிந்தனை புதிர், சிறிவரும் சோர்வு
கன்னி- வாழ்க்கையில் புகழ், வரவும் தடைப்படும்.
துலாம்- வார்த்தை ஜாலம், அசிரத்தை
விருச்சிகம்- கோசடி நடக்கும், விழிப்புடன் இரு.
தனுசு- அறிவுத் தாகம், ஆக்கப்பணி.
மகரம்- புத்திரர் புகழ், புதிய உற்சாகம்.
கும்பம்- வேவுக்காரர் தொடுப்பர், விழிப்புடன் இரு.
மீனம்- தாம்பத்தியம் சிறக்கும், தனமும் சேரும்.

— சோதிடக் கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

**அபேட்சகர்களும்**

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கைதடி செவிடர் குருடர் பாடசாலையில் கடமையாற்றிவருகிறார். எல்லாருடனும் அன்பாகப் பழகக்கூடிய இவர், எடுத்த காரியத்தை ஆரவாரமின்றி அமைதியாகச் செய்துமுடிக்கக்கூடிய வல்லமை உடையவர்.

**அபிவிருத்தி நிலையம்**

ஊர்காவற்றுறை, வெள்ளி

மிருகங்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த நாரந்தனைக் கிராமத்தில் இம்மாதம் முதல் செயற்கை முறையில் இனப்படுத்தும் நிலையம் ஒன்றை கமத்தொழில் பகுதியினர் திறந்துள்ளனர்.

மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற சைவ வாலிப மன்ற விழாவில் மட்டுநகர் எம். பி. மேற்கண்டவாறு கூறினார்.

0 0 0


**முட்டை விலை**

முட்டை விலையேறியதற்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகளே காரணமாயுள்ளனவென்று கோழிப்பண்ணைவைத்துள்ளோர் குற்றஞ்சாட்டுகின்றனர். வெளிநாட்டிலிருந்து கோழித்தீனைக் கொண்டுவருவதில் உள்ள சிரமமும், அந்நிய செலவணி சான்றிதழ் திட்டமும் தான் முட்டையின் அதிகரிப்புக்குக் காரணமாம்.

0 0 0

**எப்படி படிப்பிப்பது**

'படிப்பித்தலில் ஆசிரியர்கள் நவீன முறைகளைக் கையாளவேண்டும். ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட வேறுபாடுகளை கண்டுபிடித்து செயலாற்றும் திறன் ஆசிரியரிடம் இருக்க வேண்டும்' இவ்வாறு கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை திரு. என். விஸ்வலிங்கம் தெரிவித்தார். கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.




'ஸி' பிரிவு உதைபந்து போட்டியில்

# கொக்குவில் இந்துவும் யூனியனும் வென்றன

யாழ்ப்பாணம், சனி

யாழ் பாடசாலை விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற 'ஸி' பிரிவு உதைபந்தாட்டப் போட்டியின் முடிவுகள் சில வருமாறு:—

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும், பரமேஸ்வராக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சுவாரசியமான உதைபந்தாட்டப்போட்டியில், கொக்குவில் இந்துக்கல்லூரி 2—0 கோல்களால் எதிர்க் கல்லூரியைத் தோற்கடித்தது. இக்கோல்களை கொக்குவில் கோஷ்டியின் முன்னணி வீரர் மகாலிங்கம் 'கோணர்' அடியின் மூலம் மிகவும் அழகாகப் போட்டார். இப்போட்டிக்கு திரு. நாகமணி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

தெல்லிப்பழைக் கல்லூரியான யூனியன் கல்லூரிக்கும் மகாஜனக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற [illegible]மையான போட்டியில் யூனியன் கல்லூரி இடைவேளைக்குப்பின் ஒருகோல் போட்டு வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. பத்மநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [தே. நி]

**பிறைட் டைகர் வெற்றி**

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் இந்துக்கல்லூரி மூன்றாம் பிரிவுக்கோஷ்டிக்கும் உரும்பராய் பிறைட் டைகேர்ஸ் கிளப்பிற்குமிடையே சிநேகபூர்வமாக நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பிறைட் டைகேர்ஸ் 2—0 கோலால் இந்துக் கல்லூரிக் கோஷ்டியை தோற்கடித்தது. இந்துக் கல்லூரியில் மகாலிங்கமும் பிறைட் டைகேர்ஸில் விஜயகுமார், ஆனந்தஜோதி, பொ. திரவியம் ஆகியோரும் திறமையாக விளையாடினர். இந்துக்கல்லூரியில் கஜேந்திரனும் பிறைட் டைகேஸில் சந்திரஜோதியும் காப்டன்களாக விளையாடினர்.

உரும்பராய் இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. குமாரசுவாமி ராஜா மத்தியஸ்தராயிருந்தார்.

## "நல்லவர்கள் நெடுங்காலம் வாழ்ந்ததில்லை"

வெள்ளவத்தை, வெள்ளி

"இருபதாம் நூற்றாண்டின் சமாதானப் பிரியராகவும் அமெரிக்காவின் ஒடுக்கப்பட்ட நீக்ரோ மக்களின் பாதுகாவலராகவும் திகழ்ந்த அமரர் கென்னடியின் மறைவு இந்த உலகத்திற்குப் பெரியதோர் இழப்பாகும். அன்னாரைத் தொடர்ந்து அவரது சகோதரரும் பாவிகளின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகியது கொடுமைக்குரியது. நல்லவர்கள் நெடுங்காலம் வாழ்வதில்லை என்பதற்கு இவர்களது பேரிழப்புச் சான்றாகும். அமரர் கென்னடியின் சாதனைகளை அமெரிக்காவில் இனியொருவர் வந்து செய்வாரா என்பது சந்தேகமே."

இவ்வாறு கொழும்பு பாம் வீதியில் நடைபெற்ற கென்னடி ஞாபகதினக் கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு. கே. எட்வேட், பேசுகையில் கூறினார். திருவாளர்கள் க. குலசிங்கம், கே. சுப்பிரமணியம், நா. சுந்தரம் ஆகியோருட்பட பலர் பேசினர்.

**புராணப் படிப்பு ஆரம்பம்**

சுழிபுரம், வெள்ளி

வழக்கம்பரை அம்மன் கோவில் முன் மண்டபத்தில் இன்று தொடக்கம் கார்த்திகை மாதம் முழுவதும் காசி காண்ட புராணப் படிப்பு நடைபெறவுள்ளது. தினமும் பிற்பகல் மூன்று மணிதொடக்கம் ஆறுமணி வரையும் நடைபெறும். இப் படிப்பில் பலர் கலந்து கொள்கின்றனர். உரையாசிரியர் திரு. கா. கார்த்திகேசு பயன்சொல்லுகின்றார்.

**விவேகானந்தா வெற்றி**

அநுராதபுரம், வெள்ளி

வன்னித் தம்பன்குள இந்து மகாவித்தியாலயத்திற்கும் விவேகானந்த வித்தியாலயத்திற்குமிடையில் நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் விவேகானந்தா [5—0] அமோக வெற்றியீட்டியது.

**கூட்டம் வைக்க மண்டபம் இல்லை**

சுழிபுரம், வெள்ளி

[illegible]குறிச்சியிலுள்ள ஓர் ஆசிரியர் சங்கத்தினர் தமது சங்கக்கூட்டத்தை எந்தப் பாடசாலையிலும் வைக்க முடியாமல் இருக்கின்றனர். கல்வி இலாகா பாடசாலைகளில் கூட்டம் வைப்பதை தடை செய்துள்ளதாக தெரியவருகின்றது.

**இந்துசமயபாடம்**
**கல்லூரி அதிபர் யோசனை**

ஊர்காவற்றுறை, வெள்ளி

இந்து-இஸ்லாம் பாடங்கள் பல்கலைக்கழகங்களில் இடம்பெறவேண்டும். புகுமுகப் பரீட்சைக்கு இப்பாடங்களை ஒரு பாடமாக அங்கீகரிக்க வேண்டும். மாணவர்களுக்கு குறைந்தசெலவில் கல்வி புகட்ட பல்கலைக்கழகத்தின் கிளைகளை யாழ்ப்பாணம்-காலி ஆகிய இடங்களில் அமைக்கவேண்டும்.

காரைநகர் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கல்லூரி அதிபர் திரு. ஏ. இளையராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். சர்வகலாசாலையில் வெவ்வேறு துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கு தேசிய உயர் கல்விச் சபை நிர்ணயமான அளவுகோலை வகுத்துக்கொள்ள வேண்டுமெனவும் அதிபர் இளையராசா குறிப்பிட்டார்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக டாக்டர் திரு. பி. சிவசோதி கலந்து கொண்டார். திருமதி சிவசோதி பரிசில்களை வழங்கினார்.

**கடைகள் கொடுபட்டன**

உருத்திரபுரம், வெள்ளி

கிளிநொச்சி பட்டினசபைக்குச் சொந்தமான ஒன்பது கடைகள் திருவுளச் சீட்டு மூலம் ஒன்பது பேருக்கு வழங்கப்பட்டன. இக்கடைகளுக்கு 45 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

